பக்கங்கள் 15 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


தமிழரசு வழக்கில் புதிய திருப்பம்

**ஒக். 14 இல் விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு!**



04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 14 செவ்வாய்க்கிழமை 30.07.2024 அதிர்வு 364



# தனக்கு ஆதரவான ஆளும் கட்சி எம்.பிக்களுக்கு ரணில் அழைப்பு

## இணைந்து பயணித்த சகலருக்கும் நன்றி தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்காக ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பு இன்று மாலை 5.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. 04

## மைத்திரிக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகை 04

## கைதான 64 இந்திய மீனவர்களில் 20 பேர் நிபந்தனையுடன் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)



இலங்கைக் கடற்படையினரால் வெவ்வேறு தினங்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 64 இந்திய மீனவர்களில் 20 பேர் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தால் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் 11 படகுகளில் எல்லை தாண்டிய வேளை கைது செய்யப்பட்ட 64 மீனவர் 04

# இரத்தினபுரியில் மாணவன் மீது தோட்ட அதிகாரிகள் தாக்குதல்!

## நீதி கோரி மக்கள் போராட்டம்



இரத்தினபுரி, நிவித்திகல நிரியெல்ல தமிழ் வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் மீது பாடசாலை நேரத்தில், தோட்ட கள அதிகாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தோட்ட மக்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். 04





# நல்லூர் கந்தன் கொடிச்சீலைக்கு காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு

**(எஸ்.நிதர்ஷன்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் மகோற்சவ பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வள்ளியம்மை திருக்கல்யாணப்படிப்புடன் பெருந்திருவிழாவுக்கான பந்தற்கால் நாட்டுதல் வைபவம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்தர் மரபினருக்கு காளாஞ்சியும்,பெருந்திருவிழாவுக்கான பத்திரிகை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நல்லூர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டி மூலம் கல்வியங்காட்டில் உள்ள கொடிச்சீலை வழங்கும் செங்குந்தர் மரபினருக்கு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் எடுத்துச் சென்று கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆலய பிரதம சிவாச்சாரியர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி மு.ப. 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 நாட்களுக்கு மகோற்சவ பெருவிழா இடம் பெறவுள்ளது.















# பேச்சு நடத்திக்கொண்டே சுயாதீன வேட்பாளராக ரணில் தன்னை அறிவித்தமை மாபெரும் தவறு!

## மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடு வதாக அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக் குழு அக்கட்சியின் தலைவரும் முன் னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் நேற்று மாலை கூடியது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை களமிறக்குதல் தொடர்பிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாள ராகக் களமிறக்குவது தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று பிறிதொரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ,

“ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடு பட்டுக் கொண்டிருந்த நிலையில் அவர் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடு வதாக அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது.

2022 ஆம் ஆண்டு எவ்வித நிபந்த னைகளுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி னோம். ஆனால், கடந்த இரண்டு வரு டங்களாக அவர் பொதுஜன பெர முனவின் கட்சிக்கு முன்னுரிமை வழங்க வில்லை.

மாறாக வீழ்ச்சியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியை எமது ஆதரவைக் கொண்டு பலப்படுத்தி பொதுஜன பெர முனவைப் பலவீனப்படுத்தவே முயற்சிக் கின்றார். இதற்கு இடமளிக்க முடியாது.

காபந்து அரசில் பொதுஜன பெர முனவுக்கு பிரதமர் பதவியை வழங் குமாறு விடுத்த கோரிக்கைக்கு அவர் சாதகமான பதிலை வழங்கவில்லை. அத்துடன் பொருளாதார மீட்சிக்காக அவர் எடுக்கும் தீர்மானங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்க முடியாது. அவரது கொள்கைக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கினால் கட்சி முழு மையாக இல்லாதொழியும்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பி னரை ஜனாதிபதி வேட்பாளராகக் கள மிறக்க வேண்டும் என்று கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளார்கள். ஆகவே, பெரும் பான்மையான நிலைப் பாட்டுக்கு அமை யவே தீர்மானம் எடுக்கப்படும்.” – என்றார்.

# 20 இலட்சம் ரூபா பணத்துடன் சென்ற முல்லைத்தீவு இளைஞர் சடலமாக மீட்பு

20 இலட்சம் ரூபா பணத்துடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் பாண்டியன்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு – யோகபுரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்த ராசா ஜீவன் (வயது 27) எனும் இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞர் யோகபுரம் பகுதியில் இருந்து பாண்டியன்குளம் பகுதிக்கு 20 இலட்சம் ரூபா பணத்துடன் நேற்று திங்கட்கிழமை மாலை பயணித்துள்ளார். இரவு08.40 மணியளவில் நண்பர்களுடன் தொலைபேசியில் உரை யாடியுள்ளார்.

இரவு நீண்ட நேரமாகியும் திரும்ப வராத காரணத்தால் அவரது தொலைபேசிக்கு நண்பர்கள் அழைப்பு எடுத்த வேளை தொலைபேசி செயலிழந்து காணப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இளைஞரை அவரது நண்பர்கள்



தேடிச் சென்ற வேளை பாண்டியன்குளக் கரையில் அவரது மோட்டார் சைக்கிள் வீழ்ந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து குளத்தினுள் தேடிய வேளை இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தமிழரசு வழக்கில் புதிய திருப்பம்

# ஒக். 14 இல் விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கு எதிரான வழக்கில் விளக்கத்துக்கு முன்னரான கலந்தாய்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதி மன்றத் தில் குறித்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே விளக்கத் துக்கு முன்னரான கலந்தாய்வுக்கான திகதி அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கை விரைந்து முடிவுறுத்துவதற்கு வசதியாக மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீ தரன், சண்முகம் குகதாசன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய 4 எதிராளிகள் இன்று தமது பதில் மனுக்களைத் தாக் கல் செய்தனர்.

ஏனைய நான்கு எதிராளிகளான எம்.ஏ.சுமந்திரன், குலநாயகம், ப.சத்தி யலிங்கம், இரத்தினவடிவேல் ஆகியோர் சார்பிலான பதில் மனுக்கள் ஏற்கனவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன என் பது குறிப்பிடத்தக்கது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மைத்திரிக்கு...

யில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி வரை நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் மஹிந்த அமரவீர, இரா ஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட தரப்பினரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிக ளிலிருந்து நீக்குவதனைத் தடுக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் குறித்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான தடை உத்தரவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

### கைதான...

களின் 11 வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டன.

இதில் 4 வழக்குகளில் 25 மீனவர்க ளுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. இதே போன்று இரண்டு வழக்குகளில் 13 மீனவர்களுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

5 வழக்குகளின் 26 மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் இன்று இடம்பெற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அதில் 26 மீனவர்களில் மூவர் இரண் டாவது தடவையாகவும் எல்லை தாண் டியமையால அந்த மூவருக்கும் ஒரு வருட சிறைத் தண்டணை விதிக்கப்பட்டது. 3 படகுகளின் உரிமையாளர்கள் படகில் இருந்தமையால் படகுகள் அரசுடமை யாக்கப்பட்டதோடு தலா 40 இலட்சம் ரூபா குற்றப் பணமும் விதிக்கப்பட்டது.

குற்றப் பணம் விதிக்கப்பட்டவர்கள் அதனைச் செலுத்தத் தவறினால் தலா 6 மாத சிறைத் தண்டணை அனுபவிக்க வேண்டும் உத்தரவிடப்பட்டது.

எஞ்சிய 20 மீனவர்களும் 5 ஆண்டுக ளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டணையுடன் விடுவிக் கப்பட்டனர்.

### இரத்தினபுரியில்...

இந்நிலையில், மேற்படி தாக்குதல் சம்பவத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் வன்மையாகக் கண்டித் துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தோட்ட இளை ஞர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகம் தொலைபேசி வாயிலாக தெரிவித்ததை யடுத்து, பாடசாலைக்கு ரூபன் பெருமாள் சென்றிருந்தார்.

நீதி கோரி பாடசாலைக்கு முன்பாக திரண்டிருந்தவர்களுடன் அவர் கலந்து ரையாடியதுடன் இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு சென்றதுடன் மாணவன் மீது தாக்குதல் நடத்திய தோட்ட அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கையும் விடுத்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரையும் உடன டியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கு மாறு நிவிதிகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இரத்தினபுரி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரைத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுத்த ரூபன் பெருமாள், நிவித்திகல பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டுள்ள தாக்குதலுக்குள்ளான மாணவ னைச் சந்தித்தும் நலம் விசாரித்தார்.

### தனக்கு...

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தின் போது ஜனாதிபதிக்கு ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டை மீட்டெடுக்கும் பயணத்தில் ஆரம்பம் முதல் தம்முடன் இணைந்து பயணித்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்ப தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகப்பூர்வ சமூக வலைத்தளங்களில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“நாடு நெருக்கடியில் இருந்தபோதும் எரிபொருள், மருந்து மற்றும் அத்தியா வசியப் பொருட்களுக்காக மக்கள் போரா டும்போதும் என் மீதும் எனது திட்டத்தின் மீதும் நீங்கள் நம்பிக்கை வைத்தி ருந்தீர்கள்.

சவால்களைச் சமாளிக்க முடியாத தாகத் தோன்றிய சந்தர்ப்பத்தில் உங்க ளது அர்ப்பணிப்புக்கள் அளப்பரியன.

இப்போது எங்களுடன் இணைந்திருப் பவர்களை வரவேற்கின்றோம்.


நேர்மறையான சிந்தனைகளைப் பகுத்தறிந்து கட்சி அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றாக இணைவதன் முக்கியத்துவத்தை நீங்கள் தற்போது புரிந்துள்ளீர்கள்.

ஒன்றாக இணைவதால், நாம் இன் னும் சாதிக்க முடியும்.

அதேநேரம் செழிப்பான, ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கான எமது பணி தொடரும் என்பதை உறுதிப் படுத்துவதுடன், அதனை நனவாக்க ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும்.

இந்தப் பயணம் எளிதானதல்ல. ஆனால், ஒன்றாக இணைவதன் மூலம் நிலைபேற்றை அடையலாம்.

அனைவரும் ஒன்றிணைந்து எமது எதிர்பார்ப்புடனான இலங்கையை உரு வாக்குவோம்.” – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள் ளார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிழியும் முகத்திரை

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமை தவறானது என்று கருதுவதற்கு காத்திரமான ஆதாரங்கள், ஆவணங்கள் இருந்ததன் அடிப்படையிலேயே அவருக்கு எதிரான வழக்கில் அவர் அப்பதவியில் தொடர்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் இச்சமயத்தில், நீதியின் ஆட்சி நிலை நிறுத்தப்படுவதற்கு எதிரான சகல நடவடிக்கைகளில் இருந்தும் விலகி நிற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பகிரங்கமாகக் கோரியிருக்கின்றது.

தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்கக் காரணமாக இருந்த 9 அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் ஒன்றின் மனுதாரர் இந்த மாற்றுக் கொள்கைகளுக்கான மையமாகும்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களுக்கும் சில சட்ட நிலைமைகளை நினைவூட்டி - விஷேடமாக சுட்டிக்காட்டி - அந்த அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் உள்ள முக்கிய விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

♦ அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்ட அறிக்கைகள் உட்பட இந்த வழக்கில் மனுதாரர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின்படி தேசபந்து தென்னக்கோனை 26 பெப்ரவரி 2024 இல் பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதி நியமித்திருக்கவே முடியாது நியமித்திருக்கவே கூடாது. அப்படி நியமனம் பெறுவதற்கு அரசமைப்புக் கவுன்ஸிலில் குறைந்தது ஐந்து உறுப்பினர்களாவது அதனை அங்கீகரித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவே இல்லை.

♦ சரியான நியமனம் சாத்தியமாகும் வரை பதில் பொலிஸ்மா அதிபரை நியமித்து, அவரது பதவியை ஜனாதிபதி நீடித்திருக்க வேண்டும். அதுதான் அரசமைப்பு ஏற்பாடு. அப்படி அரசமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய ஜனாதிபதி, அதில் முழு தவறு இழைத்திருக்கின்றார். 2019ல் இருந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட போது, அந்த இடத்துக்கு சி.டி.விக்ரமரத்னவை அப்போதைய ஜனாதிபதி பதில் பொலிஸ்மா அதிபராகவே நியமித்தார். அப்படி இப்போதைய ஜனாதிபதி செயற்படுவதற்கு எந்தத் தடையும் இல்லை.

♦ ஜனாதிபதி அரசமைப்பு ஏற்பாடுகளை ஏற்று, அதன்படி செயல்பட வேண்டியவர். இப்போதைய நிலையில் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனமும் அத்தகையதே. அதனைச் செய்வதற்கு ஜனாதிபதி தவறுவாரேயானால் அதன் விளைவுகளுக்கு அவர் பொறுப்பு ஏற்க வேண்டி வரும். பதவியை விட்டு இறங்கிய பின்னரும் பதவிக்காலத்தில் அரசமைப்புக் கடமைகளை வேண்டுமென்றே நிறைவேற்றத் தவறிய குற்றங்களுக்காகப் பொறுப்பேற்கும் விடயத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு விலக்களிப்பு இல்லை என்பதை உயர் நீதிமன்றத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் தெளிவுபடுத்தி இருக்கின்றமையை தற்போதைய ஜனாதிபதிக்கும் நினைவூட்டுவது பொருத்தமானதாகும்.

♦ பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்பில் விசேடமாக குறித்தொதுக்கப்பட்ட ஏற்பாடு உள்ளது. அதைப் புறமொதுக்கி தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

♦ இப்போது உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவு ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகள், செயற்பாடுகளுக்கு குந்தகமானவை அல்ல. அந்த உத்தரவுக்கு அமைய பதில் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு அரசமைப்பில் இடம் உண்டு. அதைக் கவனத்தில் எடுத்துச் செயல்பட வேண்டிய ஜனாதிபதி அதில் தவறிழைத்தாலும், தேர்தல் விடயத்தில் இலங்கைப் பொலிஸை மாற்று ஏற்பாடுகள் மூலம் வழிநடத்தும் அதிகாரமும் சந்தர்ப்பமும் அரசமைப்பு ஊடாக தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆக, தெளிவான அரசமைப்பு ஏற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காரணமின்றிக் குழப்பியடிக்கின்றமையை மாற்றுக் கொள்கைக்கான மையத்தின் விரிவான - நீண்ட - ஆழமான சட்டக் கருத்துக்கள் பொதிந்த - அறிக்கை அம்பலப்படுத்தி நிற்கின்றது.



# 25 வருட சேவையில் வெள்ளி விழாக் கண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரவிப்பு!



சம்மாந்துறை வலயத்தில் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரும், சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறை வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வட்டம் நடத்திய சேவை நலன்பாராட்டு விழாவும் கல்வி சாதனையாளர்கள் கௌரவிப்பு விழாவும் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது இந்தக் கௌரவிப்பு இடம்பெற்றது.

காரைதீவைச் சேர்ந்த இவர் பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் 26 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவை யாற்றியுள்ளார் .

சம்மாந்துறை வலயம் உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் இதுவரை 25 வருடங்களுக்கு மேலாக உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிவரும் வி.ரி.சகாதேவராஜா இன்னும் இருமாதங்களில் ஓய்வு பெறவுள்ள நிலையில் இந்தக் கௌரவிப்பு இடம்பெற்றுள்ளது.

# கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவன் சதுரங்கப் போட்டியில் சம்பியன்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

புத்தளம் கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தரம் 07 ஐச் சேர்ந்த மாணவன் மஷாரி எஹியா ஆப்தீன் அஹ்கம் நாத்நான்டி ஜனாதிபதி கல்லூரியில் இடம்பெற்ற சிறுவர் சதுரங்க கொண்டாட்டம் 2024 இன் 13 வயது பிரிவில் வெற்றிபெற்றுச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவனுக்கான சான்றிதழையும் பதக்கத்தையும் பாடசாலையின் பிரதி அதிபர் ஏ.ஏ அஸ்ரப் வழங்கி கௌரவித்தார்.

இந்த மாணவனுக்குப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் , ஆசிரியர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.






# கிழக்கு ஆயுள்வேத வெற்றிக்கிண்ணம்

# கல்முனை அணி சம்பியனாகத் தெரிவு





**(றியாஸ் ஆதம்)**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆயுள்வேத நலன் புரிச் சங்கத்தால் நடத்தப்பட்ட “கிழக்கு மாகாண ஆயுள்வேத வெற்றிக் கிண்ணம் – 2024” கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை பிராந்திய ஏ அணி வெற்றிபெற்றுக் கிண்ணத்தைச் சுவிகரித்துக்கொண்டது.

இந்தச் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் (28) ஆரையம்பதி ஏசியன் மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியின் போது கல்முனை பிராந்திய ஏ அணி மற்றும் மட்டக்களப்பு சுப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் மோதிக்கொண்டது.

இதன் போது முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை வலய ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்கள் நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. டிரோசன் 67 ஓட்டங்களையும் புஹாரி 39 ஓட்டங்களையும் கல்முனை அணி சார்பாக பெற்றுக் கொண்டனர்.

146 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு சுப்பர் கிங்ஸ் அணி 12 ஓவர்கள் நிறைவில் 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. சபீர் 32 ஓட்டங்களையும் கிருபாகரன் 27 ஓட்டங்களையும் அந்த அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர். அதன் அடிப்படையில் இந்தப் போட்டியில் கல்முனை வலய ஏ அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஜெ.பாஸ்கரன் பிரதம அதிதியாகவும், பிரதி ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் இருந்து இரண்டு அணிகளும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் இருந்து இரண்டு அணிகளும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் இருந்து ஒரு அணியுமாக மொத்தம் 5 அணிகள் இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# நற்பிட்டிமுனை குளக்கரை பகுதியில் குவிக்கப்படும் குப்பைகளால் சிரமம்!





(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட நற்பிட்டி முனை குள பகுதியில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தாளவெட்டுவான் சந்தியில் இருந்து நற்பிட்டிமுனை நோக்கி செல்லும் பழைய இ.மி.சபை வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் இத்தகைய குப்பைகள் இனந் தெரியாதோரால் கொட்டப்படுகின்றன.

இதனால் அந்தப் பகுதியில் உள்ள குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகின்றனர். அந்தச் சூழலும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இதனை அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநரசபையிடமும் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்குள்ள குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாடுகளது எலும்புகள், கோழிகளது உரித்த இறக்கைகள் மற்றும் கழிவுகள் இந்தப் பகுதியில் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குப்பைகள் கொட்டுவதை தடுப்பதற்கு கல்முனை மாநகர சபை நடவடிக்கை எடுக்குமா என்று அந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.




# அரசடிப் பிள்ளையார் பாடசாலையில் கற்றல் உபகரணங்களின் கண்காட்சி!



(பழுவூரான்)

மட்டக்களப்பு அரசடிப் பிள்ளையார் கனிஷ்ட பாடசாலையில் கற்றல் உபகரணக் கண்காட்சி நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி ரீ. ஜெயந்திரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நேற்று திங்கட்கிழமை (29) இடம் பெற்றது.

இக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட கண்கவர் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டு ஆக்கங்களின் பொருள் விளக்கங்களும் வழங்கப் பட்டன.

அத்தோடு விஞ்ஞான விளக்கங் களுடன் கூடிய செயல் முறையூடாக விளக்கங்கள் சிறார்களால் வழங்கப் பட்டன.

இக் கண்காட்சியை அண்மையில் உள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் பார்வையிட்டுச் சென்றதுடன் இப் பாடசாலையில் முதன்முறையாக இக் காண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந் நிகழ்வில் ஆரம்ப கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.பிரகாஷ், முன்னாள் பாடசாலை அதிபர் திருமதி சந்திரிக்கா செல்வநாயகம், பாடசாலை மேம்பாட்டு நிகழ்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ. நடேசானத்தராஜா, ஆசிரியர்கள், பெற்றார்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.









# ஐஸ் போதை நுகர்ந்த நான்கு பேர் கைது!

(பாறுக் ஷிஹான் )

நிறமூட்டும் தொழிற்சாலையில் ஐஸ் போதைப் பொருள்களை நுகர்ந்த 4 சந்தேக நபர்களை கைது செய்த பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பகுதியிலுள்ள நிறமூட்டும் தொழிற்சாலையில் நீண்ட காலமாக போதைப் பொருள் பாவனை நடைபெற்று வருகிறது என்று பொலிஸாருக்கு நேற்று (29) இரவு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய செயற்பட்ட பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் அங்கு சென்று சோதனை மேற்கொண்டனர். அத்துடன் ஐஸ் போதைப் பொருளை நுகர்ந்த 4 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் 20, 18, 17, 17, வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள்கள் சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூர் சுற்றுலா பயணிகள் மீது தாக்குதல்; மூன்று பேர் கைதாகினர்!

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறாமலை தீவுக்கு செல்லும் உள்ளூர் சுற்றுலா பயணிகள் மீது தாக்குதல் நடத்திய படகு சேவை உரிமையாளர்கள் மூவரை கைது செய்துள்ளனர் என்று குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புபிரதேசம்தெகிவளை பகுதியில் இருந்து புறா தீவுக்குச் சுற்றுலா செய்ய இருந்த சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்திய 60 , 40 வயது மற்றும் 45 வயது படகு உரிமையாளர்களே இவ்வாறு குச்சவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் சுற்றுலா பயணி ஒருவருக்குக் காயம் ஏற்பட்ட நிலையில் அவர் நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்பியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 27 ஆம் திகதி மாலை இடம் பெற்றுள்ளது. இது சம்பந்தமான நடவடிக்கையை 28 ஆம் திகதி எடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை 29 ஆம் திகதி காலை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியதாகவும் ஆஜர் படுத்தியவர்களில் ஒருவர் கடுமையான இதய நோயாளி எனத் தெரிவித்து அவருக்கு சரீர பிணை வழங்கப்பட்டுள்ளது என்றும் ஏனைய இருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவானார்

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என கல்லூரியின் அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார்.

இந்த மாணவியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று (29) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது விஞ்ஞானப் பாட இணைப்பாளர் ஏ.எல்.நவாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மகஜனகல்லூரியில்இடம்பெற்றமாகாண மட்ட ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய இப்பாடசாலையின் இரு மொழி கற்கைப் பிரிவில் தரம் 09 இல் கலவி பயின்று வரும் எம்.ஐ.பாத்திமா இப்பத்



இரண்டாமிடம் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த வெற்றிக்காக மாணவர்களை வழிப்படுத்திய பாடசாலை விஞ்ஞானப் பாட இணைப்பாளர், விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பெற்றோர்கள் மற்றும் வெற்றி பெற்ற மாணவி போன்றோருக்கு அதிபர் தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் எதிர்வரும் சனிக்கிழமை இந்த மாணவி தேசிய மட்டப் போட்டிக்காக கலந்து கொள்ளவுள்ளார் எனவும் இதன்போது அதிபர் குறிப்பிட்டார்.




# சதுரங்கத்தில் சம்பியனாகினர் கல்முனை ஸாஹிரா மாணவர்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 20 வயதுக்கு உட்பட்ட மற்றும் 17வயதுக்கு உட்பட்ட பிரிவில் கலந்து கொண்ட ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் முதலிடங்களைப் பெற்று சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டதோடு தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகினர்.

திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் தசாப்தகால வரலாற்று வெற்றிகளுக்கு உறுதுணையாக நின்று மாணவர்களுக்கு பயிற்சியளித்து, தெரிவு செய்து போட்டிக்கு தயார்படுத்தி அழைத்துச் சென்ற சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ்.எம்.சுஹ்தான், பாடசாலையின் சதுரங்க விளையாட்டு பொறுப்பாசிரியர்களான எம்.வை.எம்.றகீப் மற்றும் எச்.எம்.ஜெமீன் ஆகியோருக்குப் பாடசாலைச் சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இந்த வெற்றியை பெற்றுந் தந்த மாணவர்களான (20 வயதுக்கு உட்பட்ட பிரிவு) ஐ.எம்.சம்லி சாஹி, எம்.ஏ.தமீம், எம்.என்.எம்.றீமாஸ், ஏ.ஆர்.ஏ.சிமர், எம்.ஏ.ஏ. அல்பர், எம்.எம். அஹ்சப் ஹபி, ஏ.ஆர்.ஏ.றாசிம் (17 வயதுக்கு உட்பட்ட பிரிவு) எம்.இஷ்ட்,எம்.சானிப், ஐ.கே.எம்.ஆக்கில் கான், ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத், எம்.ஜே.ஐ.சஹ்மி, ஏ.அர்ஹம் பர்வீஸ், என்.அப்துல் லாஹ் சப்கி, எம்.அம்ஹர் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# பெண்கள் சதுரங்க போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலை மாணவிகள் பெண்களுக்கான சதுரங்க மாகாண மட்டப் போட்டி நிகழ்வில் பங்கு பற்றி தேசிய மட்டதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

27, 28, 29 ஆகிய தினங்களில் திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இடம்பெற்ற கிழக்கு மாகாண சதுரங்க போட்டில் கலந்து கொண்ட பாடசாலை அணி 20 வயது பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு இலங்கை மாணவர் கல்வி நிதியம் உதவி





ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு உதவி வழங்கியுள்ளது.

இலங்கையில் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கடந்த 36 வருடங்களாக உதவி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையில் இந்த வாரம் அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்வி நிதியத்தின் அம்பாறை மாவட்ட தொடர்பாடல் அமைப்பான பாண்டிருப்பு மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் அதன் அலுவலகத்தில் தலைவர் திரு. ந. கமலநாதன் தலைமையில் இரு தினங்கள் நடைபெற்றது.

நிகழ்வில் உதவி பெறும் மாணவர்களும் அவர்களின் தாய்மாரும் நிறுவகத்தின் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொருமாணவருக்கும்ஆறுமாதங்களுக்கான நிதிக் கொடுப்பனவாக 24 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் இருந்து கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தில் இணைந்துள்ள அன்பர்களின் ஆதரவால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வாரம் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பில் நடந்த இந் நிகழ்வில் மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் உப தலைவர் பி.வசந்தன், பொருளாளர் த. ரவிச்சந்திரன், உப செயலாளர் வே.நகுலேஸ்வரன், செயற்குழு உறுப்பினர்களான செல்வி. ஞா. தர்மிகா, சி. புனிதன், க.யனார்த்தன் ஆகியோர் மாணவர்களுக்கு நிதியுதவிகளை வழங்கி வைத்தனர்.

அத்துடன் ஆஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உறுப்பினர் திருமதி வள்ளி ஸ்ரீகாந்தா அனுப்பி வைத்த மாணவர்களின் தாய்மாருக்கான உடு புடைவைகளும வழங்கப்பட்டன.

தமது பிரதேச மாணவர்களின் கல்வி விருத்தியில் அக்கறை கொண்டு தொடர்ந்து உதவி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்துக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் பாண்டிருப்பு மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் ந.கமலநாதன் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி தெரிவித்தார்.

வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கம்பகா, மலையகத்தில் நுவரெலியா மாவட்ட மாணவர்களுக்கும் இந்த ஆண்டின் இறுதி ஆறு மாதங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வடக்கு - கிழக்கு இளம் மீனவர் கூட்டு!



( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் மெசிடோ சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையுடனும் ஏற்பாட்டிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள வவுனியா மாவட்டத்தை தவிர ஏனைய அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கி இளையோரை முன்னெடுத்து வடக்கு - கிழக்கு இளம் மீனவர் கூட்டு என்ற கூட்டு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கிலுள்ள ஏழு மாவட்டங்களிலிருந்தும் இளையோர் பங்குபற்றியிருந்தனர்.

இதன் முக்கிய நோக்கம், மீனவ சமூகங்கள் அடுத்த தலைமுறையினரான இளையோரை வழிநடத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் இருக்கின்றது.

இந்த பொறுப்பை இன்றைய இளம் சமூகம் தட்டிக் கழிக்க முடியாது. மீனவ இளம் சமூகத்தினர் இந்த பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவர்கள் மீனவ வளத்தையும் மீனவ சட்டத் திட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்களில் இவர்களின் பங்கேற்றல் கட்டாயம் இருக்க வேண்டும்.

ஏனைய மீனவ சங்கங்கள் மற்றும் சமாசங்கள் ஆகிய நிர்வாகத்தில் கனிசமான இளையோர் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும் போன்ற முக்கிய விடயங்களுடன் இந்த அமர்வில் இளையோரின் பங்குபற்றல் காணப்பட்டது.



# கேரளாவை அதிகாலை உலுக்கிய மண் சரிவு!

## 80க்கு மேற்பட்டோர் உயிரிழப்பு

## ஆயிரக்கணக்கானோர் சிக்கித் தவிப்பு

## மீட்பில் இந்திய இராணுவம் மும்முரம்

**திருவனந்தபுரம், ஜுலை 30**
**கேரளாவில் பெய்துவரும் கனமழை காரண மாக ஏற்பட்ட பாரிய நிலச்சரிவுகளால், கேரளா மாநிலம் பெரும் சோகத்துள் உறைந்துள்ளது. இந்த நிலச்சரிவில் சிக்கி 80க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, ஆயிரக் கணக்கானோர் தனித்தீவில் சிக்கியது போல தத்தளித்து வருகின்றனர்.**

கேரளாவில் தென்மேற்குப் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளமையால், கடந்த சில வாரங்களாக அங்கு கன மழை வெளுத்து வாங்கி வருகின்றது.

இதன்படி, கேரளாவின் வயநாடுப் பகுதியில் நேற்று இரவு பெய்த கன மழையைத் தொடர்ந்து இன்று அதி காலை 2 மணியளவில் சூரல்மலைப் பகுதியில் பயங்கரமான நிலச்சரிவு ஏற்பட்டது.

இதையடுத்து, அதிகாலை 4.30 மணியளவில் மற்றொரு பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது.

பின்னர் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலச்சரிவுகளால் வைத்திரி, வெள் ளேரிமலை, மேப்பாடி உள்ளிட்ட பகுதி களில் பயங்கரமான பாதிப்பு ஏற்பட்டது. அட்டமலையில் இருந்து முண்டகைப் பகுதியைச் சென்றடைவதற்கான ஒரே ஒரு பாலமும் வெள்ளத்தில் சேத மாகியுள்ளது.

இதனால், தனித்தீவில் சிக்கியது போல 500 குடியிருப்புகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் மாட்டிக் கொண்டனர். நிலச்சரிவில் சிக்கி இதுவரை பலியானோர் எண்ணிக்கை 80ஐ தாண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணி யில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பலரின் நிலை என்னவென்று தெரி யாதமையால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.







# வெனிசுலா அதிபராக மீண்டும் மதுரோ ஏற்க மறுத்து எதிர்தரப்புகள் களேபரம்

வெனிசுலாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், நிக்கோலஸ் மதுரோ மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் என அந்நாட்டு தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்ததையடுத்து அங்கு பெரும் போராட்டம் வெடித்துள்ளது.

வெனிசுலாவில் நேற்றுமுன்தினம் அதிபர் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தற்போதைய அதிபர் நிக்கோலஸ் மதுரோ மீண்டும் போட்டியிட்டார். எதிர்க்கட்சிகளின் கூட்டணி வேட்பாளர் எட்மண்டோ கொன்சலஸ் மற்றும் 8 பேர் களத்தில் நின்றனர். எனினும், நிக்கோலஸ் மதுரோவுக்கும், எட்மண்டோ கொன்சலசுக்கும் இடையிலேயே நேரடிப் போட்டி நிலவியது.

இந்த பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள், உடனடியாக எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் நிக்கோலஸ் மதுரோ 51.2 சதவீத வாக்குகள் பெற்றார். எட்மண்டோ கொன்சலஸ் 44.2 சதவீத வாக்குகள் பெற்றார். இதனால் மதுரோ வெற்றி பெற்றுள்ளார் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் வெனிசுலாவின் தலைநகரான கராகஸில் திரண்ட போராட்டக்காரர்கள், அதிபருக்கு எதிராக கோஷங்களை எழுப்பி, அவரது தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை கிழித்தெறிந்துள்ளனர்.

இதற்கிடையில், நகரம் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு, கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டதுடன், பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நிக்கோலஸ் மதுரோவுக்கு ஆதரவான துணை இராணுவக் குழுக்கள் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளன எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ, தமது வேட்பாளர் எட்மண்டோ கொன்சாலஸ் 70 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளார் எனவும் அதனை மறைக்க அரச ஆதரவாளர்கள் முயற்சித்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதற்கிடையில், தலைநகர் கராகஸில் இருந்து ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில்கலந்துகொண்ட61வயதானமதுரோ, வெனிசுலாவில் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்த சில தரப்புக்கள் முயற்சிக்கின்றன எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.



பக்கங்கள் 06

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 30/07/2024

## பகிரங்க மன்னிப்பைக் கோரினார் கனடிய தலைமை பயிற்றுவிப்பாளர்

கனடிய மகளிர் உதைபந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் பேவ் பிரிஸ்மென் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்.

தாம் இழைத்த தவறுகளுக்கான பொறுப்பினை ஏற்றுக் 02




# கனடா வாகன விபத்தில் மூவர் பரிதாபமாகச்சாவு!

**கனடாவின் நியூ பிரவுன்ஸ்விக் மாகாணத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் கொல் லப்பட்டுள்ளனர்.**

**நியூ பிரவுன்ஸ்விக்கின் மில் க்கோவ்வின் அதிவேக நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

ஒற்றை வாகனமொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனத்தின் டயர் ஒன்று வாகனத்திலிருந்து கழன்ற காரணத்தினால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

19 வயதான ஆண் ஒருவரும் 23 வயதான இரண்டு பெண்களும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவ இடத்திலேயே இந்த மூவரும் உயிரிழந்து விட்டனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாகன விபத்தின் போது இந்த மூவரும் வாகனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டு உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனத்தின் சாரதி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அவருக்கு உயிராபத்து கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





# விளையாட்டுத் துப்பாக்கிகளை வைத்து அச்சுறுத்தும் சம்பவங்கள் நடக்கின்றன

## கனடிய பொலிஸார் எச்சரிக்கை

கனடாவில் விளையாட்டுத் துப்பாக்கிகள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

துப்பாக்கிகள் போன்ற உருவ அமைப்பை கொண்ட விளையாட்டு துப்பாக்கிகளை சிலர் தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விளையாட்டு துப்பாக்கிகளை பயன்படுத்தும் போது மக்கள் பீதி அடைய நேர்வதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் எல்கின் துறைமுகப் பகுதி கரையோரத்தில் இருவர் துப்பாக்கிகளுடன் சஞ்சரிக்கின்றனர் எனப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்த நபர்களை சோதனை இட்டபோது அவை இரண்டும் விளையாட்டு துப்பாக்கிகள் என கண்டறியப்பட்டுள்ளது.

நிஜ துப்பாக்கிகள் போன்றே இவ்வாறு விளையாட்டு துப்பாக்கிகளை வைத்திருப்பது ஆபத்துக்களை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாதாரண துப்பாக்கிகளையும் இவ்வாறான விளையாட்டுத் துப்பாக்கிகளையும் இலகுவாகப் பிரித்து அறிந்து கொள்ள முடியாதுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறு நிஜத்துப்பாக்கிகளைப் போன்ற விளையாட்டு துப்பாக்கிகளை பயன்படுத்துவது பொருத்தமாகாது என பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு விளையாட்டு துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியவர்கள் என அடையாளப்படுத்தப்படக் கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு துப்பாக்கிகளை பயன்படுத்தும் போது பொறுப்புணர்வுடன் பயன்படுத்துமாறு பொலிஸார் கோரியுள்ளார்.

## பகிரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கிறார் எனவும் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார் என்ச்வும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நியூசிலாந்து அணி பயிற்சியில் ஈடுபட்டபோது ட்ரோன் கேல்மராக்களை கொண்டு அவர்களின் செயற்பாடுகளை உளவு பார்த்தார் எனக் கனடிய மகளிர் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பேவ் பிரிஸ்மென் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பாரிஸில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று வரும் நியூசிலாந்து அணி பயிற்சியில் ஈடுபட்டபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் நியூசி லாந்து ஒலிம்பிக் கமிட்டி, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடிய கால்பந்தாட்ட நிறுவனம் பிரிஸ்மெனை பணியிடை நிறுத்தி இருந்தது.

கடந்த 2023 ஆம் ஆண்டு மிகக் கடுமையான ஓர் காலத்தை தமது அணி வெற்றிகரமாக எதிர்கொண்டதாகவும், அணி வீராங்கனைகள் சிறந்த பண்புகளை உடைய நேர்மையான வர்கள் எனவும்




அவர் தெரிவித்துள்ளார்.

எனவே உளவு பார்த்தல் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்பினைத் தாம் ஏற்றுக் கொள்கிறார் எனவும் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார் எனவும் பிரிக்ஸ்மென் தெரிவித்துள்ளார்.

சர்வதேச உதைபந்தாட்ட பேரவையினால் பிரிக்ஸ்மென் மற்றும் இரண்டு துணை பயிற்றுவிப்பாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கனடா மீது சர்வதேச கால்பந்தாட்டப் பேரவை அபராதம் மற்றும் கட்டாயப் புள்ளிக் குறைப்பு ஆகிய தண்டனைகளை விதித்துள்ளது.




# வீட்டு அழைப்பு மணிகளை தவறாக பயன்படுத்திய தம்பதிக்கு அபராதம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் பகுதியில் வீட்டு அழைப்பு மணியைத் தவறாகப் பயன் படுத்திய குற்றச்சாட்டில் தம்பதியி னருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் கதவில் பயன்படுத்தப்படும் அழைப்பு மணியை இந்தத் தம்பதியி னர் அயலவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தி யுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அயலவர்களை இழிவுபடுத்தும் வகையில் அவர்கள் ஓசை எழுப்பியும் தூற்றியும் உள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இந்தத் தம்பதியினருக்கு 900 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தவறான மொழிப்பிரயோகம் மற் றும் கூச்சலிடல் போன்ற செயற்பாடு களில் இந்த தம்பதியினர் ஈடுபட்டனர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹொங் விக் சான் மற்றும் ஹுங் ஏஞ்சலா சியூங் ஆகிய தம்பதியின ருக்கு எதிராக இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு அழைப்பு மணியின் ஒலி பெருக்கி சாதனத்தை பயன்படுத்தி இவர்கள் அயலவர்களுக்கு இடையூறு விளைவித்து வந்தனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந்தக் குற்றச் சாட்டின் அடிப்படையில் இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# தாவரங்களின் பால் நிலையால் பொது மக்களுக்குப் பாதிப்பா?

## கனடிய ஆய்வாளர்கள் தரும் விளக்கம்

கனடாவில் தாவரங்கள் வளர்க் கப்படுவதனால் மக்கள் நோய் வாய்ப்படும் சாத்தியம் அதிகம் என ஆய்வு தகவல் ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

கனடியர்களில் 25 வீதமானவர்க ளுக்கு ஏற்படக்கூடிய பருவ கால ஒவ்வாமைக்கு தாவரங்களின் பால் நிலை ஓர் ஏதுவாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆண் மரங்கள் பழங்கள் மற்றும் பூக்களை தருவதில்லை என்ற காரணத்தினால் நகரங்களில் அதிக அளவு ஆண் மரங்களை வளர்க் கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செயற்கையான முறையில் இந்த ஆண்கள் மரங்கள் உருவாக்கப்படு கின்றன.

எவ்வாறெனினும், ஆண் மரங்கள் அதிக அளவு மகரந்த துகள்களை உற்பத்தியை செய்கின்றன எனவும் இது சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

மொன்றியல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இது தொடர்பில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.



சில மரங்களின் மகரந்தத் துகள் பரவுகை அடிப்படையில் மக்களுக்கு அது ஒவ்வாமைகளை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




# கனடாவில் குழுக்களுக்கு இடையிலான மோதலில் இந்திய வம்சாவளியினர் பலி!

கனேடிய நகரமொன்றில், காரில் பயணித்த இருவர் சுடப்பட்டனர் எனப் பொலிசாருக்கு தகவல் கிடைத்தது.

வெள்ளிக்கிழமை இரவு, கனடாவின் வான்கூவர் நகரில் இருவர் துப்பாக்கியால் சுடப்பட்டனர் எனவும், அதைத் தொடர்ந்து அவர்கள் பயணித்த வாகனம் வேறு இரண்டு வாகனங்கள் மீது மோதி விபத்து நடந்துள்ளதாகவும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிசார், துப்பாக்கியால் சுடப்பட்ட இருவரில் ஒருவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அவருக்கு உயிருக்கு ஆபத்து எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதே நேரத்தில், அதே காரில் பயணித்த Hitkaran Johal (வயது25) என்னும் இந்திய வம்சாவளி இளைஞர் உயிரிழந்துவிட்டார்.

விசாரணையில், அவர் ஏற்கனவே 2018ஆம் ஆண்டு குற்றச்செயல் ஒன்றிற்காக கைது செய்யப்பட்டவர் என்பது தெரியவந்தது.

அத்துடன், இது இரு குழுக்களுக்கிடையிலான மோதலாக இருக்கலாம் என தாங்கள் கருதுகின்றனர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், இந்தச் சம்பவத்தால் பொதுமக்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

# வயோதிபரிடம் கைவரிசையைக் காட்ட முயன்ற தம்பதியினருக்கு வலைவீச்சு!

றொறன்ரோவில் கொள்ளை முயற்சியுடன் தொடர்புடைய இருவரை கண்டுபிடிக்க பொதுமக்களின் உதவி பொலிஸாரால் கோரப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி யோங் மற்றும் ஷெப்பர்ட் வீதிகளுக்கு அருகாமையில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் வயது முதிர்ந்த ஒருவரிடம் பாதை ஒன்றைக் குறிப்பிட்டு அதற்கு எவ்வாறு செல்வது என வழி கேட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


பாதையை பற்றி கேட்பது போன்று அருகாமையில் சென்று அந்த வயோதிபரின் காற்சட்டை மற்றும் சட்டை பைகளில் இருக்கும் பணம் உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையிட முயற்சிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் சம்பவம் இடம்பெற்ற போது அந்த வயோதிபரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட நபர்களின் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ச்க் கூறப்படும் ஆணின் வயது 35 முதல் 43 வயதாக இருக்கலாம் எனவும் பெண்ணின் வயது சுமார் 30 ஆக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்கள் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# நகரத்தை அழகுபடுத்தும் தோட்டப் படுக்கைகளில் தினசரி காணாமல் மறைந்து போகும் பூங்கன்றுகள்!

## பிரிட்டிஷ் கொலம்பியாவின் சம்மர்லேண்டில் தாவரத் திருட்டுகள்

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சம்மர் லேண்டில் உள்ள நகராட்சி தோட்ட படுக்கைகளில் இருந்து

இந்த பருவத்தில் டசின் கணக்கான தாவரங்கள் மறைந்து வருகின்றன.

“இது மிகவும் வருத்தமளிக்கிறது” என்று சம்மர்லேண்டின் தோட்டக்காரர் ஹீதர் மனோக் கூறினார். “எங்கள் பூங்காக்கள் துறையானது நகரத்தை அனைவருக்கும் அழகாக மாற்ற முயற்சிக்கிறது, குடியிருப்பாளர்கள் மட்டுமல்ல, சுற்றுலாப் பயணிகளும் கூட.” - என்றார் அவர்.

கடந்த மே மாதம் தொடங்கிய திருட்டு சம்பவங்கள் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ளன.

மாவட்டத்தில் இதுவரை 75 செடிகள் வரை திருடப்பட்டுள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது.

“எங்கள் நீர்ப்பாசனம் அனைத்தும் செயல்படுகிறதா மற்றும் அனைத்தும் உயிருடன் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்த நான் தினமும் எல்லாவற்றையும் சரிபார்க்கிறேன்,” என்று மனோக் கூறினார்.

“எனவே முந்தைய நாள் அங்கு இல்லாத பெரிய துளைகளைக் கவனித்தேன், நான் என்ன பயிரிட்டேன், என்ன இருந்தது என்று எனக்குத் தெரியும், எனவே அதைக் கண்டு பிடிப்பது மிகவும் எளிதானது.” என்றார் அவர்.

சிறிய தெற்கு ஒகேனக்கல் சமூகம் முழுவதும், நகராட்சி மண்டபம் மற்றும் உள்ளூர் RCMP பிரிவின் முன் கூட இந்தத் திருட்டுகள் நடந்துள்ளன.

“உங்கள் வரி செலுத்துவோரின் டொலர்கள் இந்த சமூகத்தை மிகவும் அழகாக மாற்றப் போகின்றன என நாம் நினைக்கிறோம். ஆனால் முழு சமூகத்தையும் விட தாங்கள் முக்கிய மானவர்கள் என்று சிலர் நினைப்பது மிகவும் ஏமாற்றமளிக்கிறது” என்று சம்மர்லேண்டின் மேயர் டக் ஹோம்ஸ் கூறினார்.






# வின்னிபெக் ஏரியில் காணாமல் போன மூன்றாவது மீனவரின் சடலமும் மீட்பு!

வின்னிபெக் ஏரியில் காணாமல் போன மூன்றாவது மீனவரின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மனிடோபாவின் றோயல் கனடியன் பொலிஸ் (RCMP) பிரிவு தெரிவித்துள்ளது.

ஜூன் மாத இறுதியில் வடக்கு மனிடோபாவில் மீன்பிடிக்கச் சென்ற போது காணாமல் போன மூன்று பேரில் 29 வயதான டெலானி மெக்கில்வரியும் ஒருவர்.

ஹட்டேரியன் அவசர நீர்நிலைப் பதிலளிப்புக் குழு மற்றும் உள்ளூர் தேடுபவர்களின் உதவியுடன் ஞாயிற்றுக்கிழமை அவரது உடலைக் கண்டுபிடித்ததாக RCMP தெரிவித்துள்ளது.

மிசிபாவிஸ்டிக் க்ரீ நேஷனைச் சேர்ந்த மூன்று பேர் உரிய காலத்தில் வீடு திரும்பாதமையை அடுத்து அவர்களைத் தேட, முதலில் ஜூன் 28 அன்று ஏரியின் வடக்குப் பகுதிக்கு பொலிஸார் அழைக்கப்பட்டனர்,

மிசிபாவிஸ்டிக் க்ரீ நேஷன் மூன்று பேரையும் அனுபவம் வாய்ந்த மீனவர்கள் என்று விவரித்தது.

மூவர் குழுவிற்கு சொந்தமான பொருள்களை தேடுதல் குழு முதலில் கண்டுபிடித்தது. பின்னர் அவர்கள் லிட்டில் மூஸ் ஏரியில் ஒரு மூலை ரக மானை சுட்டு உரித்ததற்கான சான்றுகள் கிடைத்தன. அடுத்த நாள் டைலர் பாலன்டைன்( வயது 31) உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

கூடுதல் தேடல்கள் ஜூலை 17 அன்று இரண்டாவது நபரான 28 வயதான ரேடன் டிக்கின் உடலை மீட்டெடுக்க காவல்துறைக்கு வழிவகுத்தது.

இப்போது நேற்று முன்தினம் மூன்றாவது மீனவரின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

# வாகனத் தரிப்பு விதி மீறல் அபராதம் ரொறன்ரோவில் அதிகரிக்கின்றது!

கனடாவின் ரொறன்ரோ நகரில் வாகனத் தரிப்பு விதி மீறல் அபராதங்கள் அதிகரிக்கப்பட உள்ளன.

நாளை மறுதினம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த அபராதத் தொகை அதிகரிப்பு நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வாகனங்களைத் தரித்து வைத்திருத்தல், வாகனங்களைத் தேவையின்றி நிறுத்தி வைத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்படும் என ரொறன்ரோ நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு வாகனத் தரிப்பு தொடர்பிலான அபராதத் தொகை அதிகரிப்பு ஊடாக போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நடத்தல், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் பொது போக்குவரத்தைப் பயன்படுத்ததல் போன்றவற்றை ஊக்குவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதிக வாகன நெரிசல் காணப்படும் பகுதிகளில் வாகனங்களை தரித்து நிறுத்த வேண்டாம் எனவும் கோரப்பட்டுள்ளது.

வாகன தரிப்புக் கட்டணம் செலுத்தாது வாகனத்தை நிறுத்துவோருக்கான அபராத தொகை 30 டொலர்களில் இருந்து 50 டொலர்களாக உயர்த்தப்பட உள்ளது.

வாகனத் தரப்பிற்கு தடை செய்யப்பட்ட சைக்கிள் பாதைகளில் வாகனங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான அபராத தொகை 60 டொலர்களில் இருந்து 200 டொலர்களாக அதிகரிக்கப்பட உள்ளது.

வாகனத் தரிப்புத் தொடர்பான குற்றச்செயல்களுக்கான அபராதத் தொகையை அதிகரிக்கும் யோசனைக்கு கடந்த ஏப்ரல் மாதம் ரொறன்ரோ நகரப் பேரவை அனுமதி வழங்கியிருந்தது.



இதன் அடிப்படையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வாகன தரிப்பு குற்றச் செயல்களுக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்பட உள்ளது.

இதேவேளை வாகனத் தரிப்புக் குற்றச் செயல்கள் தொடர்பில் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட மாட்டா எனவும், இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்திகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

குறுஞ்செய்திகளை அனுப்பி சிலர் மோசடிகளில் ஈடுபடுகின்றனர் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.